# பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எ ம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சீர்காழி 609108

## 2018-2019ஆம் கல்வி ஆண்டின் ஆண்டறிக்கை

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்ற யவை'' (குறள் 400)

''ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வம் கல்வி'' (பரிமேலழகர்), அந்தக் கல்வி ஒருவருக்குக் கண் போன்றது, கல்வி இல்லாதவன் புறக்கண் இருந்தாலும் அவன் கண் இல்லாதவனுக்கு ஒப்பாவான் எனத் திருக்குறள் கல்வியின் பெருமையை முன்வைக்கிறது. 'கல்'- என்பதற்குத் தோண்டுதல் என்னும் பொருளும் உண்டு, கல்வி நம்முடைய அறிவையும் ஆற்றலையும் தோண்டி வெளிக்கொணர்கிறது. இத்தகு மேன்மையான கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் பணியில் பங்குபெற்றுள்ள எம் கல்லூரி, இரண்டாமாண்டு கல்விப்பணியைச் செவ்வனே நிறைவு செய்துள்ளது.

02.08.2017அன்று சீர்காழி வட்டம் புத்தூர் சீனிவாச (சுப்பராய அரசு தொழில் நுட்பக் கல்லூரி ) வளாகத்தில் இக்கல்லூரி B.A. தமிழ், B.A. ஆங்கிலம், B.Com.,வணிகவியல், B.Sc. கணிதம் மற்றும் B.Sc. கணினியியல் ஆகிய ஐந்து பாடப்பிரிவுகளுடன் தற்காலிகக் கட்டிடத்தில் தொடங்கப்பட்டது . 05.10.2017 அன்று பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்ட வல்லுநர் குழுவினர் கல்லூரியின் இட அமைவு செயல்முறை ஆகியவற்றை ஆய்வு செய்தனர். அதன்படி 01.11.2017 அன்று பல்கலைக்கழக இசைவு இக்கல்லூரிக்கு வழங்கப்பட்டு நவம்பர் 2017இல் மாணவ மாணவியர் முதல்பருவத் தேர்வுகளை எழுதினர்.

கல்லூரி தற்போது இயங்கி வரும் சீனிவாச சுப்பராய அரசு தொழில் நுட்ப கல்லூரி வளாகத்திலேயே 10 ஏக்கர் நிலம் இக்கல்லூரியின் நிரந்தர கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டிடம் தற்போது 80சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

01.08.2018 அன்று திண்டுக்கல் எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரியில் இணைப்பேராசிரியர் மற்றும் வேதியியல்துறைத் தலைவராகப் பணியாற்றிய முனைவர் திருமதி தே.லட்சுமி அவர்கள் முதல்வராகப் பணி உயர்வுபெற்று இக்கல்லூரியின் முதல்வராகப் பணியில் சேர்ந்தார்.

இக்கல்லூரி 01.08.2018முதல் முதல்வர் முனைவர் தே.லட்சுமி அவர்களின் சீரிய தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டுவருகிறது. முதல்வரோடு இணைந்து எம் கல்லூரி 459 மாணவ மாணவிகள், 12 நிரந்தர பேராசிரியர்கள், 5 கௌரவ விரிவுரையாளர்கள், 4 பெற்றோர் ஆசிரியர் கழக கௌரவ விரிவுரையாளர்கள், மூன்று கணினி கற்பித்தல் திட்ட கௌரவ விரிவுரையாளர்கள், அலுவலகத்தில் 4 பணியாளர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் கீழ் ஓர் அலுவலக உதவியாளர், ஒரு துப்புரவாளர் , ஒரு சுகாதார பணியாளர், ஓர் இரவுநேரக் காவலர் ஆகியோரைக் கொண்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

எமது கல்லூரியின் இணையதள முகவரி (www.pcptmgrgasc.ac.in)யில் ஒவ்வொரு ஆண்டும் கல்லூரியில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் பதிவேற்றும் செய்யப்படுகிறது.

இக்கல்வியாண்டில் ஆங்கிலத்துறை பெற்றோர் ஆசிரியர் கழக விரிவுரையாளர் திரு.சத்தியமூர்த்தி முனைவர் பட்டம் பெற்றுக் கல்லூரிக்குச் சிறப்புச் சேர்த்துள்ளார்.

இக்கல்வியாண்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த பேராசிரியர்கள் 18ஆய்வுக் கட்டுரைகளை மாநில, தேசிய மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்களில் சமர்ப்பித்து வெளியிட்டுள்ளனர்.

13.02.2018 அன்று நீடூர் தீன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வணிகவியல் துறையில் நடைபெற்ற ஒருநாள் தேசிய கருத்தரங்கில் நம் கல்லூரி வணிகவியல் துறை மாணவிகள் கலந்துகொண்டனர். இதில் Team Building என்ற போட்டியில், இரண்டாம் ஆண்டு மாணவிகள் ஆர்.நித்தியா, எஸ்.சுபேதா, ஆர்.ராகவி, ஆகியோர் இரண்டாம் பரிசு வென்றனர்.

29.06.2018 அன்று தமிழ்நாடு பொன்விழா கொண்டாத்தின் நினைவாக நடத்திய மாவட்ட அளவிலான கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள் நாகை ஜி.எஸ்.பிள்ளை கல்லூரியில் நடைபெற்றது. இதில் கார்த்திகா இரண்டாம் ஆண்டு கணினி, முத்தமிழ் இரண்டாமாண்டு கணினி ஆகியோர் பங்கேற்றனர்.

14.09.2018 அன்று தமிழ் வளர்ச்சித் துறை நடத்திய மாவட்ட அளவிலான இலக்கிய மன்றப் போட்டிகளில் ஆசைத்தம்பி ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு, ஆர்.சுந்தர் கணினி இரண்டாம் ஆண்டு, பிரீத்தி ஆங்கிலம் முதலாம் ஆண்டு ஆகியோர் பங்கேற்றனர்.

மயிலாடுதுறையில் நடைபெற்ற பெரியார் அண்ணா பேச்சுப்போட்டியில், நம் கல்லூரி மாணவ மாணவியர் கலந்துகொண்டனர். விசாலினி கணிதம் இரண்டாம் ஆண்டு, உதயா கணிதம் முதலாம் ஆண்டு, தீபிகா கணிதம் இரண்டாம் ஆண்டு, சங்கவி ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு, பிரீத்தி ஆங்கிலம் முதலாம் ஆண்டு, பிரியதர்ஷினி தமிழ் முதலாம் ஆண்டு ஆகியோர் பங்கேற்றுச் சிறப்புச் செய்தனர்.

நாமக்கல் கவியரசர் கலைச்சங்கம் 72வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்திய இலக்கிய மன்றப் போட்டிகளில் எம் கல்லூரியில் 70க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

வாக்காளர் தின விழிப்புணர்வு போட்டி 25.01.2019அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் எம் கல்லூரி மாணவர் ஆசைத்தம்பி ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு, சங்கவி ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு, பிரீத்தி ஆங்கிலம் முதலாம் ஆண்டு கலந்து கொண்டனர்.

எம் கல்லூரியில் தமிழ், வணிகவியல், கணிதம் ஆகிய துறையைச் சார்ந்த மூன்று பேராசிரியர்கள் ஆய்வு வழிகாட்டியாகச் செயல்படுகின்றனர்.

**கணினி கல்வியறிவுத் திட்டம் (computer Literacy Programme – CLP)**

கணினி கற்பித்தல் திட்டம் 2018-19 ஆம் கல்வியாண்டில், இத்திட்டத்தின் பொறுப்பாளராகக் கணினித்துறைத் தலைவர் முனைவர் பா.அசோக் செயல்படுகிறார். இத்திட்டத்தின் கீழ் 3 பயிற்றுநர்கள் பணியமர்த்தப்பட்டு மாணவர்களுக்குக் கணினி கற்பித்து வருகின்றனர்.

**நூலகம்**

இக்கல்வி ஆண்டில் ரூபாய் 1.50 லட்சம் மதிப்பில் அனைத்துத் துறைகளுக்கும் 740 புத்தகங்கள் வாங்கப்பட்டு உள்ளன. தற்பொழுது 3406 புத்தகங்கள் எமது நூலகத்தில் உள்ளன. எமது கல்லூரி நூலகர் முனைவர். ஆர்.எம்.சுப்பிரமணியன் திறம்பட பதிவு செய்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நூல்களை வழங்கி வருகிறார். இந்நூலகத்திற்கென்று இரண்டு நாளிதழ்கள் (இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி) வாசகர் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன.

**விளையாட்டுத்துறை**

கல்லூரி விளையாட்டுத் துறை இயக்குநர் முனைவர் த.பிரபாகரன்அவர்கள் சீரிய முறையில் செயல்பட்டுவருகிறார். 09.08.2018அன்று பூண்டிக் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான மாரத்தான் போட்டி, 16.08.2018, 17.08.2018 ஆகிய தினங்களில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சதுரங்கப் போட்டி, 5.10.2018அன்று திருச்சி நேஷனல் கல்லூரியில் நடைபெற்ற தடகளப்போட்டி, 09.10.2018, 10.10.2018 ஆகிய நாட்களில் கும்பகோணம் அன்னை கலைக்கல்லூரியில் நடைபெற்ற கபாடி போட்டி,

11.10.2018, 12.10.2018 ஆகிய நாட்களில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கபாடி போட்டி முதலான போட்டிகளில் எம் கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

01.03.2019 அன்று விளையாட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் ஆர்.வந்தனா, பாரதிதாசன் உடற்கல்வித்துறை தலைவர் பேராசிரியர் முனைவர் அ.பழனிச்சாமி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்ற கல்லூரி மாணவ மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கினர்.

**நாட்டு நலப்பணித்திட்டம்**

நாட்டு நலப்பணித்திட்டம் பாரதிதாசன் பல்கலைக்கழகம் இக்கல்வி ஆண்டில் ஒரு அலகு அளித்துள்ளது. இதன் திட்ட அலுவலராகத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் எஸ்.சசிகுமார் செயல்படுகிறார். இவ்அலகானது ஐம்பது மாணவ மாணவிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

6.02.2019 அன்று நாட்டு நலப்பணித்திட்ட அலகின் துவக்க விழா நடைபெற்றது. பண்பாட்டு மனித வள மேம்பாட்டு பயிற்றுநர் திரு. லெ.பாபுநேசன் சிறப்பு விருந்தினராக வருகை தந்து குத்துவிளக்கேற்றித் தொடங்கிவைத்தார். நாட்டுநலப் பணித் திட்டத்தின் சீரிய நோக்கங்களை எடுத்துரைத்து மாணவர்களுக்கு எழுச்சியூட்டினார்.

08.02.2019 அன்று, பாரத பிரதமரின் ‘‘சுத்தமான இந்தியா’’ (Swacheh Bharath Abhiyan) திட்டத்தின் கீழ், கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களைக் கொண்டு, சீர்காழி வட்டம் கொள்ளிடம் கடை வீதியிலும், கொள்ளிடம் இராமர் கோவிலிலும் தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டது. கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ மாணவிகள் 50 பேர்கள் பணியினைச் சிறப்பாக மேற்கொண்டனர். இந்நிகழ்விற்கு நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் செள.சசிகுமார், ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியார் ச.சத்தியமூர்த்தி, கணினி அறிவியல் உதவிப்பேராசிரியர் வி.கண்ணன் ஆகியோர்களும் பணியினைச் சிறப்பாகச் ஒருங்கிணைத்தனர்.

13.02.2019 அன்று பாரதிதாசன் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட பயிற்சி முகாமிற்குத் திட்ட அலுவலராக முனைவர் எஸ்.சசிகுமார் உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை மற்றும் மாரியப்பன் உதவிப்பேராசிரியர் கணிதத்துறை ஆகியோர் கலந்துகொண்டனர்.

28.02.2019 அன்று சுகாதரத்துறையின் மருத்துவ முகாம் ஸ்ரீநிவாசா சுப்பராயா பல்தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இம்முகாமில் எம் கல்லூரி நாட்டுநலப் பணித்திட்ட மாணவ மாணவியர்கள் பொதுமக்களை உரிய பிரிவுகளுக்கு அழைத்துச் செல்லும் பணியைச் சிறப்பாகச் செய்தனர்.

25.03.2019 முதல் 31.03.2019 முடிய எம் கல்லூரி ‘‘தூய்மை இந்தியா’’ நாட்டுநலப்பணித் திட்ட சிறப்பு முகாமை முதல்வர் முனைவர் திருமதி தே.லெட்சுமி அவர்கள் தலைமையில் ஆனந்தக்கூத்தன் கிராமத்தில் 50 மாணவ மாணவிகளோடு நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் திரு செள.சசிகுமார் அவர்கள் நடத்தினார். இதில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மாணவர்களுக்குப் பயனுள்ள சொற்பொழிவுகள், மரக்கன்றுகள் நடுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.

**நிதி ஒதிக்கீடு**

இடவசதி பற்றாக்குறையின் பொருட்டு , தற்காலிக வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கு ரூ18.60 லட்சம் அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டு ஆறு வகுப்பறைகள் கொண்ட தற்காலிக வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

புதிய கல்லூரி கட்டிடத்திற்கான 80% சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. இக்கட்டிடத்தின் சுற்றுச்சுவர் எழுப்புவதற்கு இக்கல்வியாண்டில் ரூ.30.60 லட்சம் ரூபாய் ஒப்பளிப்புச் செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கல்வி உதவித்தொகை**

இரண்டாமாண்டு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவினர்க்குரிய அரசு உதவித்தொகை 81 மாணவர்களுக்கு ரூபாய் 82,546 பெற்றுத்தரப்பட்டுள்ளது. இரண்டாமாண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினர்களுக்கு உரிய உதவித்தொகை 127 மாணவர்களுக்கு ரூபாய் 6,63,830 அரசிடமிருந்து பெற்றுத் தரப்பட்டுள்ளது. முதலாமாண்டு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினர்க்குரிய அரசு உதவித்தொகை பெறுவதற்குரிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாணவர்களின் தேர்ச்சி விவரம்**

2017-2018ஆம் கல்வி ஆண்டில் பல்கலைக்கழகத் தேர்வில் மாணவர் பெற்ற தேர்ச்சி விவரம்

| | |
|---|---|
| part-1 தமிழ் 84% | Part-II ஆங்கிலம் 94% |
| Part-III முதன்மைப்பாடம் | இளங்கலைத்தமிழ் - 23% |
| இளங்கலை ஆங்கிலம் - 16 % | இளம்வணிகவியல் - 39% |
| இளமறிவியல் கணிதம் -16% | இளமறிவியல் கணினி - 48% |

**பகடிவதை தடுப்புக்குழு**

இக்குழுவின் பொறுப்பாளராகத் தமிழ்த்துறை தலைவர் முனைவர் மா.சாந்தி, கணிதத் துறைத் தலைவர் முனைவர் ஆர்.சாந்தி ஆகியோர் பொறுபாளராக உள்ளனர். கல்லூரி வளாகத்தில் கேலிவதை தொடர்பான நிகழ்வுகள் நடைபெறா வகையில் மாணவ மாணவிகளைக் கண்காணிப்பதுடன் அவ்வப்போது தகுந்த அறிவுரைகளும் வழங்கி வருகின்றனர்.

**சமூகச் சேவைக்குழு**

இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் வே.மகேஸ்வரி செயல்படுகிறார். தேசிய விழாக்களில் இனிப்புக்கள் வழங்கி இக்குழுவினர் விழாவை ஒருங்கிணைத்தார்.

**நுண்கலை மன்றம்**

இம்மன்றத்தின் பொறுப்பாளராகத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் எஸ்.சசிகுமார் ஆங்கிலத்துறை கௌரவ விரிவுரையாளர் எஸ்.வினோத் ஆகியோர் உள்ளனர்.

**நுகர்வோர் மன்றம்**

வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் வே.மகேஸ்வரி அவர்களைப் பொறுப்பாளராகக் கொண்டு 01.02.2019 அன்று துவக்கவிழா நடத்தப் பெற்றது. இம்மன்றத்தை திரு ஜெக.சண்முகம் (மாநிலத் தலைவர் ACCEPT), துவங்கிவைத்து நுகர்வோர் விழிப்புணர்வு குறித்துக் கருத்துரை வழங்கினார். 05.02.2019 அன்று இம் மன்றம் நுகர்வோர் உரிமைகளும் கடமைகளும் என்ற தலைப்பில் விழிப்புணர்வு கூட்டம் ஒன்றை நடத்தியது. மயிலாடுதுறை தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கல்லூரியின் பொருளியல் துறை உதவிப்பேராசிரிர் முனைவர் ஆர்.எம்.மெய்யம்மை சிறப்புரையாற்றினார்.

**இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்**

இச்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராகத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சி.வடிவேலன் செயல்படுகிறார். 200 மாணவ உறுப்பினர்களைக் கொண்டு இச்சங்கம் செயல்படுகிறது.

அரசு பொது சுகாதாரத்துறையுடன் இணைந்து30.01.2019 அன்று உலக மக்கள் தின விழா கொண்டாடப்பட்டது. உலக மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகள் என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி நடைபெற்றது. இதில் 29 மாணவ -மாணவியர்கள் கலந்துகொண்டனர். க.பிரீத்தி முதலாண்டு ஆங்கிலம் முதலிடத்தையும் எஸ்.சுபஸ்ரீ இரண்டாமாண்டு தமிழ் இரண்டாம் இடத்தையும், சங்கவி இரண்டாம் ஆண்டு ஆங்கிலம் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

31.01.2019அன்று RRC உடன் இணைந்து ரத்ததான முகாம் நடத்தப்பட்டது. சிதம்பரம் அரசு மருத்துவ மனை மருத்துவர் திரு.இராஜமூர்த்தி தலைமையிலான குழுவினார் வருகைத் தந்து சுமார் 40 மாணவ மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ரத்த தானம் செய்தனர்.

08.02.2019 அன்று விழிப்புணர்வுக் கூட்டம் ஒன்றை இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் நடத்தியது. இதில் நாகை மாவட்ட இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு.ஜி.வி.பாண்டியன் உதவிப்பேராசிரியர் TBML கல்லூரி (பொறையாறு) அவர்கள் முதலுதவி குறித்த பொருண்மையில் பேசி பயிற்சி அளித்தார்.

27.02.2019 அன்று மன்னன்பந்தல் அ.வ.அ. கல்லூரி (தன்னாட்சி) யில் நடைபெற்ற மாவட்ட அளவிலான இளைஞர் செஞ்சிலுவை சங்க பயிற்சி முகாமில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.வடிவேலன் அவர்கள் தலைமையில் அன்பு (இரண்டாம் ஆண்டு தமிழ்), ராஜேஷ் (முதலாம் ஆண்டு தமிழ்), ஹரிஹரன் (முதலாம் ஆண்டு ஆங்கிலம்), அன்பரசன் (முதலாம் ஆண்டு வணிகவியல்) ஆகியோர் கலந்து கொண்டனர். ா

07.03.2019, முதல் 09.03.2019வரை மூன்று நாட்கள் பொறையாறு TBML கல்லூரியில் நடைபெற்ற பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கான பணிப்பட்டறையில் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.வடிவேலன் அவர்கள் தலைமையில் நம் கல்லூரி மாணவர்கள் குணசீலன், மதன் (இரண்டாம் ஆண்டு தமிழ்), ராகுல்டிராவிட் (இரண்டாம் ஆண்டு வணிகவியல்), திவான் (இரண்டாம் ஆண்டு கணிதம்), பாலமுருகன் (கணினி அறிவியல்) ஆகியோர் கலந்துகொண்டனர்

## செஞ்சுருள் சங்கம்

கணினித்துறை தலைவர் முனைவர் பா.அசோக் அவர்கள் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார். 100 மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இச்சங்கம் செயல்பட்டு வருகிறது. 31.01.2019 அன்று கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து இரத்ததான முகாம் நடைபெற்றது. மாணவ மாணவியர்கள் உள்பட 40 பேர் பங்கேற்றார்கள், சிதம்பரம் அரசு மருத்துவ மனை மருத்துவர் இராஜமூர்த்தி தலைமையிலான குழுவினர் வருகை தந்து சுமார் 40 மாணவ மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ரத்த தானம் செய்தனர். சீர்காழி நம்நாடு உரிமையாளர் திரு அப்பாஸ் அலி, ரத்த தானம் செய்த மாணவ மாணவிகளுக்கு பிஸ்கட் மற்றும் பழச்சாறு அளித்தார்.

## உள்ளமைப்பு தர நிர்ணயக் குழு IQAC

2018-19ஆம் கல்வி யாண்டின் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல் துறை தலைவர் முனைவர் வே.மகேஸ்வரி பொறுப்பேற்றார். இதன் உறுப்பினர்களாகத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் எஸ்.சசிகுமார், கணிதத் துறைத்தலைவர் முனைவர் இரா.சாந்தி கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் ப.அசோக் ஆகியோர் உள்ளனர். இக்குழு கல்லூரியின் அடிப்படைத் தரவுகளைப் பதிவாக்கி வருகின்றது. 14.12.2018 அன்று முனைவர் எஸ்.சசிகுமார் ,மற்றும் முனைவர் ப.அசோக் ஆகியோர் சென்னையில் நடைபெற்ற உள்ளமைப்புத் தர நிர்ணயக் குழுவின் RUSA ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டனர்.

## பெற்றோர் ஆசிரியர் கழகம்

இக்கழகம் முதல்வர் அவர்களைத் தலைவராகவும், தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் எஸ்.சசிகுமார் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு செயல்படுகிறது. 20.02.2019 அன்று பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. அதில் பெற்றோர் சார்பில் ஆர்.தியாகராஜன் எம்.ஏ.பாஸ்கரன், எஸ்.முருகநாதன், பி.புஷ்பநாதன், வி.அனிதா ஆகியோர் செயல் உறுப்பினர்களாகத் தேர்ந்தேடுக்கப்பட்டனர் . இக்கழக நிதியிலிருந்து 4 கௌரவ விரிவுரையாளர்களையும் ஒரு அலுவலக உதவியாளர், ஒரு துப்புரவு பணியாளர், ஒரு இரவுக்காவலர் நியமிக்கப்பட்டுள்ளர். மேலும் கணினியியல் ஆய்வகத்தில் உள்ள கணினிகள்

குளிர்சாதன வசதியுடன் இருக்கவேண்டும் என்ற காரணத்தினால் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து 36,500/- ரூபாய் மதிப்பில் ஒரு குளிரூட்டும் கருவி வாங்கப்பட்டுள்ளது.

**கல்லூரிப்பேரவை நிகழ்வுகள்**

15.08.2018 அன்று சுதந்திர தின விழா பேரவை சார்பில் கொண்டாடப்பெற்றது. தமிழ்த்துறைத்தலைவர் இணைப்பேராசிரியர் முனைவர் மா.சாந்தி தேசியக் கொடி ஏற்றி சுதந்திர தின உரை நிகழ்த்தினார். சர்வ சமய வழிபாட்டுடன் இனிப்புகள் வழங்கப்பட்டன.

03.10.2018 அன்று காந்திஜெயந்தி விழா சர்வ சமயப் பாடல்களுடன் கூட்டு வழிபாடாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

12.01.2019அன்று சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது மாணவ மாணவியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் ஒன்று கூடி விழா கொண்டாடப்பட்டது.

25.01.2019 அன்று சீர்காழி வட்டாச்சியர் அலுவலகத் தேர்தல் துறையுடன் இணைந்து வாக்காளர் தினப் பேரணி எம் கல்லூரி நடத்தியது. வட்டாட்சியர் பேரணியைத் துவங்கி வைத்தார். முதல்வருடன் அனைத்துப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் நன்முறையில் பேரணியை நடத்தினர்.

26.01.2019 அன்று குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. எம் கல்லூரி முதல்வர் தேசியக் கொடியேற்றி குடியரசு தின உரை நிகழ்த்தினர். சர்வசமய வழிபாட்டுடன் இனிப்புகள் வழங்கப்பட்டன.

04.02.2019அன்று சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வினை முன்னிட்டு எம் கல்லூரி மாணவ மாணவியர் தலைக்கவசம் அணிவது பற்றி விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.

08.03.2019அன்று நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பாக எம் கல்லூரியில் முனைவர் மா.சாந்தி அவர்களின் முன்னிலையில் உலக மகளிர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**துறைமன்றச் செயல்பாடுகள்**

**தமிழ்த்துறை**

10.01.2019 அன்று தமிழ் மன்றச் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. முனைவர் கோ.சதீஸ் கௌரவ விரிவுரையாளர் *இயற்கையும் இலக்கியமும்* என்ற பொருண்மையில் கருத்துரையாற்றினார். 21.02.2019அன்று உலகத் தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டது. இதில் தமிழ்த்துறை மாணவியர் கவிதை நடனம், நாடகம் ஆகிய கலைநிகழ்ச்சிகளின் மூலம் தாய்மொழிவழிக் கல்வியின் அவசியத்தை முன்வைத்தனர்.

**ஆங்கிலத்துறை**

10.01.2019அன்று நடைபெற்ற ஆங்கில மன்ற கூட்டத்திற்கு பொறையாறு டி.பி.எம்.எல். கல்லூரி ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் திரு.இ.பென்ஹூலர் அருணோதயம் வருகை தந்து Effective use of language என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார்.

**வணிகவியல் துறை**

வணிகவியல் துறை மன்றக் கூட்டம் 09.01.2019 அன்று நடைபெற்றது. மணல்மேடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரின் வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் எல்.கணேசமூர்த்தி அவர்கள் Carrier development என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

**கணிதத் துறை**

ஸ்ரீனிவாசா சுப்பராயா அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரி, புத்தூர், கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ஏ.உமா Automata Theory என்ற தலைப்பில் 10.01.2019 அன்று சிறப்புரையாற்றினார்.

**கணினி அறிவியல் துறை**

கணினி அறிவியல் மன்றக்கூட்டம் :Linux open source leader ship என்ற தலைப்பில் 10.01.2019 அன்று கடலூர் பெரியார் அரசு கலைக் கல்லூரி கணினித்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ஜி.கார்த்திகேயன் கருத்துரை வழங்கினார்.